# பேராசிரியர் ச. முத்துக்குமரன்
## முன்னாள் துணைவேந்தர்

முனைவர் ச. முத்துக்குமரன் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இரண்டுமுறை (ஆறு ஆண்டுகள்) பணிபுரிந்து 1994-இல் ஒய்வு பெற்று சென்னையில் வந்து குடியேறினார். அதன் பின் 1996 ஜூலை மாதத்தில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தில் உறுப்பினர் செயலராக பொறுப்பேற்று அக்டோபர் 2001-லிருந்து துணைத்தலைவராகவும் பொறுப்பேற்று சனவரி 2006 வரை இப்பதவிகளில் பணிபுரிந்தார்.

இவர் தனது பொறியியல் பட்டப் படிப்பை 1952-ல் முடித்த பின் சென்னை மாநில பொதுப்பணித் துறையில் பொறியாளராக 14 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். 1966-ஆம் ஆண்டு கிண்டி பொறியியல் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பத்து ஆண்டுகள் கழித்து, 1976-ல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் தனி அதிகாரியாகச் சேர்ந்தார். 1978-ல் இந்திய அரசின் துணைக்கல்வி ஆலோசகராகச் சேர்ந்து நான்கு ஆண்டுகள் தில்லியில் பணிபுரிந்தார். தில்லியில் இருந்து திரும்பி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் பதிவாளராக 1982-ல் பொறுப்பேற்றார். திருச்சியில் துணைவேந்தராக ஆகும் வரை, ஆறு ஆண்டுகள் பதிவாளராக இருந்தார்.

தமிழ்நாடு மாநில திட்டக் குழுவில் தொழில் நுட்பக் கல்வி பொறுப்புக் குழுவின் தலைவராகவும், மாநில அளவிலான தன்னாட்சிக் கல்லூரிகளின் ஆய்வுக் குழுவின் தலைவராகவும், அரசு உதவி பெறாத பொறியியற் கல்லூரிகளின் ஆய்வுக் குழுவின் உறுப்பினராகவும், அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவராகவும், தொடக்கக்கல்வியில் தமிழ் பயிற்று மொழியாகவும், எல்லா நிலையிலும் தமிழ் பயிற்றுமொழி ஆக்கவும் வழி வகைகள் ஆராய அமைக்கப்பட்ட குழுவில் உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினராகவும், அரசின் பல்வேறு குழுக்களின் உறுப்பினராகவும் தலைவராகவும் அவர் செய்த கல்விப் பணி பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. மாநிலத்தில் தன்னாட்சி கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகவும் இளநிலைப் பட்டப் படிப்புக் கல்வித் திட்டத்தை மேம்படுத்தவும், புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக சட்ட முன்வரைவுகள் தீட்டுவதிலும் உயர்கல்வி மன்ற செயலர் என்ற வகையில் இவரது பணி குறிப்பிடத்தக்கவை. இப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் இவர் சமச்சீர்க் கல்விக் குழுவின் தலைவராக செயற்பட்டு 2007-ல் அறிக்கை அளித்தார்.

பேரா. முத்துக்குமரன் அவர்கள் துணை வேந்தராகப் பணியாற்றும்போது, புதுமையான பல பாட திட்டங்களை வகுப்பதிலும் பல்கலைக்கழகத்தில் பல புதிய துறைகளை உருவாக்குவதிலும் பெரும் பங்கு வகித்தார். புவி அமைப்பியல் பள்ளி, எதிர் காலத்துறை, தமிழியல் துறை, சமுதாயவியல் பள்ளி மற்றும் தொலைதூரக் கல்வி மையம் ஆகியவை இவர் துணைவேந்தராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்டவை.

இவர் தனது துறையான பொதுப் பொறியியலில் முனைவர் பட்டம் பெற்று அணைக்கட்டுகள் மற்றும் பலவித கட்டுமானங்களுக்கு அடித்தளம் மற்றும் அத்திவாரம் வடிவமைப்பதில் இவரது ஆய்வுப் பணி குறிப்பிடத்தக்கது. அத்திவாரம் எவ்வளவு கீழிறங்கும் என்பதை கணக்கிடுவதற்கான வழிமுறைகளை இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்காக இவர் வகுத்தளித்தார். இவர் பல அறிவியல் தொழில் நுட்பக் கட்டுரைகள் வரைந்து வெளியிட்டுள்ளார். இவர் தனது இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு தங்கப் பதக்கங்களும் பெற்றுள்ளார். இதுவரை இவர் பதிமூன்று தமிழ் நூல்களும் இரண்டு ஆங்கில நூல்களும் வெளியிட்டுள்ளார். இவைத் தவிர பல இதழ்களில் பெரும் எண்ணிக்கையில் கட்டுரைகள் வரைந்துள்ளார். ''நெஞ்சில் நிறுத்துங்கள்'' என்ற இவரது முதல் தமிழ் நூல் தமிழக அரசின் முதல் பரிசை வென்றுள்ளது. அதே நூலுக்கு தமிழ் பல்கலைக்கழகம் ஒரு பாராட்டு இதழும் அளித்தது.

எல்லா நிலைகளிலும் தமிழ் பயிற்சி மொழியாக ஆவதற்கு இவர் பெரிதும் உழைத்து வருகிறார். 1966 முதல் 1976 வரையிலான காலக்கட்டத்தில் இவர் கிண்டி பொறியியல் கல்லூரியில் பணியாற்றும் போதே தமிழ் ஆட்சிமொழி பயிற்று மொழி, கலைச்சொல் ஆக்கம் இவற்றில் எல்லாம் பெரிதும் ஈடுபாடு கொண்டு

உழைத்து வந்தார். பொறியியல் கல்லூரி தமிழ் மன்றத்தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றினார். அக்கால கட்டத்தில் (அறுபதுகளிலும் எழுபதுகளிலும்) பல தமிழ் அறிவியல் கருத்தரங்குகள் நடத்தியுள்ளார். கோயம்புத்தூரிலும் தமிழ் அறிவியல் கருத்தரங்குகளில் முக்கிய பங்கு வகித்துள்ளார். இவர் துணைவேந்தராக இருந்த போது ஐந்து துறைகளுக்குத் தேவையான எல்லாப் பாட நூல்களும் தமிழில் எழுதி வெளியிட ஏற்பாடு செய்தார். இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டு அப்பணி தொடர்கிறது. இவர் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியால், பாரதிதாசன் பல்கலைக்கழகம் தமிழ் இசைக்களஞ்சியமும் வெளியிட்டது. இன்றும் தமிழ் வாழவும் வளரவும் ஆக்கப்பூர்வமாக செயலாற்றி வருகிறார். எல்லாத் துறைக் கல்வியையும் தமிழர்கள் தமிழ் மூலமாகவே பெற முடியும் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையும் செயற்பாடுமுள்ளவர் இவர்.

1973-இல் இவர் இந்தியப் பொறியாளர் நிறுவன இதழில் எழுதிய கட்டுரைக்காக மைய அரசின் பாசனம் மற்றும் சக்தித் துறை இவருக்கு பொன் பதக்கம் வழங்கியது. மறு ஆண்டில் ''சமுதாயத்தில் பொறியாளர்களின் இடம்'' என்ற கட்டுரையை இவர் அந்நிறுவனக் கருத்தரங்கில் படித்தமைக்காக இவருக்குப் பொன் பதக்கம் அளிக்கப்பட்டது. ''நெஞ்சில் நிறுத்துங்கள்'' என்ற இவருடைய நூலுக்குத் தமிழக அரசு பரிசு வழங்கிச் சிறப்பித்தது. தமிழகப் புலவர் குழு இவருக்கு தமிழ்ச் சான்றோர் என்ற பட்டமும், தருமபுர ஆதினம் தமிழ்க் கலைச்செல்வர் என்ற பட்டமும் அளித்து கௌரவித்தன.

## Books Published in English

1. Issues in Higher Education Science and Technology
2. Issues in Education, Science and Technology.
3. Letters from an Academic to his Colleagues.

Publisher Mrs. M. Rathnavathy T-64A, 32nd Cross Street, Besant Nagar, Chennai - 600 090.

## Books Published in Tamil

1. நெஞ்சில் நிறுத்துங்கள்
2. தமிழனே இது கேளாய்
3. தமிழ் வாழ வேண்டும்
4. நாமும் நாடும் முன்னேற வேண்டும்
5. மக்கள் வாழ்வு மலரட்டும்
6. தமிழ் தழைத்திடுக
7. நாட்டு மக்களும், நல்லாட்சியும்
8. வாழ்க்கை வாழ்வதற்கே
9. மதுவை ஒழிப்போம், மதியை வளர்ப்போம்
10. வெற்றி பெறுவது எப்படி ?
11. காலம் உன் கையில்
12. வாழ்ந்து காட்டுவோம் வாழச் செய்வோம்

வெளியீட்டாளர்: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடேட், சென்னை - 18. திருநெல்வேலி - 6, கோயம்புத்தூர் - 1, கும்பகோணம் - 1, திருச்சிராப்பள்ளி - 2, சேலம் - 1, மதுரை - 1.

13. மக்கள் மது மக்களாட்சி

வெளியீட்டாளர்: உந்துநர் அறக்கட்டளை, அடையாறு, சென்னை - 600 020.